<u>**சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்**</u>

**முன்னிலை: திருமதி.த. மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, ஓமலூர்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை

<u>**இந்து திருமண அசல் மனு எண்: 167/2025**</u>
**CNR No.TNSA19-000767-2025**

யாமினி ...மனுதாரர்

/ எதிராக /

மோகன்ராஜ் ...எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக என் முன்பாக கொண்டுவரப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மை காரணமாக அவர் மீது ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும், மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்டும், இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

<u>**உத்தரவு**</u>

இம்மனு, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கொங்கனாபுரம் கச்சுப்பள்ளி செல்லியம்மன் கோவிலில் 13.06.2008 அன்று இருவரின் சம்மதத்துடன் இந்து குல வழக்கப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக் கோரி, இந்து திருமணச் சட்டம், பிரிவு 13(1)(i-a) படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் B.Sc., B.Ed., படித்த பட்டதாரி ஆவார். எதிர்மனுதாரர் B.Sc., படித்த பட்டதாரி ஆவார். மனுதாரருக்கு எதிர்மனுதாரர் மாமன் மகன் உறவுமுறை ஆவார். மனுதாரரும் எதிர்மனுதாரரும் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக

ஒருவரையொருவர் காதலித்து வந்திருக்கிறார்கள். இந்நிலையில், எதிர்மனுதாரருக்கு நன்கு அறிந்த கொங்கனாபுரம் கச்சுப்பள்ளி செல்லியம்மன் கோவிலில், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 13.06.2008 அன்று இருவரின் சம்மதத்துடன் இந்து குல வழக்கப்படி திருமணம் நடைபெற்றிருக்கிறது.

மேற்படி திருமணத்திற்கு பிறகு மனுதாரரும் எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் வீட்டில் குடியிருந்து இல்வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறார்கள். எதிர்மனுதாரர் சேலம் நகரில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் உயர் பதவியில் வேலை பார்த்து வந்திருக்கிறார். திருமணத்தின் பயனாக பெத்தேல் மருத்துவமனையில் கடந்த 21.10.2010 அன்று அபிஷேக் என்ற ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. அவருக்கு தற்போது சுமார் 14 வயது ஆகிறது. இந்நிலையில் மனுதாரரும் எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் வீட்டில் சுமார் 2 வருடங்கள் மட்டுமே குடும்பம் நடத்தி வந்திருக்கிறார்.

எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் ஆண் குழந்தை பிறந்த பின்னர் எதிர்மனுதாரர் சரிவர குடும்பம் நடத்த தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்காமலும், வீட்டினை பராமரிக்காமலும் இருந்து வந்திருக்கிறார். இதனால் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. அதன் பின்னர் மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு எதிர்மனுதாரரை அழைத்து சென்று சுமார் 4 ஆண்டுகள் குடும்பம் நடத்தி வந்திருக்கிறார். மனுதாரரின் வீட்டில் குடும்பம் நடத்தி வந்த காலங்களிலும் எதிர்மனுதாரர் தன் மனம் போன போக்கில் வாழ்ந்து வந்திருக்கிறார். மனுதாரரும் காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு, குழந்தையின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எதிர்மனுதாரருடன் சுமூகமாக வாழ முயற்சி செய்து வாழ்ந்து வந்திருக்கிறார். ஆனால் மனுதாரரின் முயற்சி பலனளிக்கவில்லை.

எதிர்மனுதாரரின் செய்கைகள் மனுதாரருக்கு பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும் எதிர்மனுதாரர் பல மணி நேரம் செல்போனில் பேசுவதும், மனுதாரரை ஒருமையில் பேசுவதும், "முறைப்படி பெண் பார்த்து திருமணம்

செய்திருந்தால் வரதட்சணையாக 50 சவரன் தங்க நகை வாங்கியிருப்பேன் என்றும், மனுதாரரை காதலித்து திருமணம் செய்ததால் எவ்வித வரதட்சணையும் கிடைக்கவில்லை" என்றும் கூறி மனுதாரரை அவமதித்து பேசி வந்திருக்கிறார். மேலும் "வாழ்வதற்கே நீ தகுதியற்றவள்" என்று மரியாதை குறைவாகவும் அநாகரிகமாகவும் நா கூசும் கடுஞ்சொற்களை கூறி மனுதாரரின் மனதை புண்படுத்தி வந்திருக்கிறார்.

மேற்படி சூழ்நிலையில் எதிர்மனுதாரர் 27.12.2014ம் தேதியன்று மனுதாரருடன் சண்டையிட்டு, மனுதாரரையும் அவரது மகனையும் விட்டு பிரிந்து சென்றிருக்கிறார். அதன் பின்னர் ஒரு வார காலத்திற்கு அவரது தொலைபேசிக்கு அழைப்பு விடுத்து மனுதாரர் பேசியபோது, எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றும், வேறு பெண் பார்த்து இரண்டாவது திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் திட்டவட்டமாக கூறியிருக்கிறார். மனுதாரர் எதிர்மனுதாரரிடம் பேசுவதற்காக தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் அவர் மனுதாரரின் தொடர்பை தொடர்ந்து துண்டித்து வந்திருக்கிறார். மனுதாரர் செய்வதறியாது வாழ்ந்து வந்திருக்கிறார். கடந்த 02.03.2025ம் தேதியன்று மனுதாரர் தன்னுடைய குலதெய்வ கோவிலான சானார்ப்பட்டி அண்ணமார் கோவிலுக்கு சாமி கும்பிட சென்றபோது அங்கு எதிர்மனுதாரரும் அவருடன் ஜோதி என்ற பெண்ணும் நெருக்கமாக இருந்ததை கண்டு மனுதாரர் பெரும் அதிர்ச்சியடைந்திருக்கிறார்.

மனுதாரர் எதிர்மனுதாரரிடம் "யார் அந்த பெண்? இவ்வளவு வருடம் எங்கே போனீர்கள்? என்னிடமும் நமது மகனிடமும் கூட சொல்லாமல் எங்கே சென்றீர்கள்?" என்று கேட்டதற்கு, எதிர்மனுதாரர் "எனக்கு உன்னுடன் வாழ பிடிக்கவில்லை என்றும், உன்னுடன் குடும்பம் நடத்த முடியாது என்று வீட்டை விட்டு போகும் போதே திட்டவட்டமாக சொல்லிவிட்டேனே என்றும், அதனால் தான் ஜோதியை இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன்" என்று கூறியிருக்கிறார். அதற்கு மனுதாரர் தன்னுடைய வாழ்க்கைக்கு பதில் சொல்லும்படி கேட்டபோது "நீ யாரென்றே எனக்கு தெரியாது; உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள்" என்று எதிர்மனுதாரர் கூறியிருக்கிறார்.

அதன் பின்னர் மனுதாரர் எதிர்மனுதாரரை தேடி கொங்கனாபுரம் சென்று அவரது வீட்டில் பார்த்தபோது, அங்கு அக்கம்பக்கத்தினர், எதிர்மனுதாரர் ஜோதி என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டு சேலத்தில் குடும்பம் நடத்தி வருவதாக மனுதாரரிடம் தெரிவித்திருக்கிறார்கள். மனுதாரர், எதிர்மனுதாரர் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு வசிக்கும் இடத்தை அறிய முடியாமல், தன்னுடைய இல்லற வாழ்க்கையையும் குடும்ப வாழ்க்கையையும் இழந்து ஒரு நடைபிணம் போல வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரர் இரண்டாவதாக ஜோதி என்பவரை திருமணம் செய்தது தொடர்பாக ஓமலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 08.08.2025 அன்று புகார் மனு அளிக்கப்பட்டு, அந்த மனு தற்போது நிலுவையில் உள்ளது. அந்த மனு தொடர்பான சி.எஸ்.ஆர். எண் 461/2025 ஆகும். எதிர்மனுதாரர் பணபலமும் படைபலமும் கொண்டவர் என்பதால் மேற்படி புகார் மனு மீது மகளிர் காவல் நிலையத்தாரால் இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மனுதாரர் தனது மகனை தன்னுடைய பராமரிப்பில் பாதுகாத்து கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்து வருவதாலும், மனுதாரரை நிராகரித்து பிரிந்து வாழ்ந்து வருவதாலும், இருவரும் சேர்ந்து வாழும் வாய்ப்பு இல்லை. இதனால் மனுதாரர் இல்லற வாழ்க்கையில் சுக துக்கமின்றி அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாமல் மிகுந்த மன உளைச்சலுக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் ஆளாகி நடைபிணமாக வாழ்ந்து வருகிறார். மனுதாரரும் எதிர்மனுதாரரும் மனமொன்றி வாழ முடியாத சூழ்நிலையை எதிர்மனுதாரர் ஏற்படுத்தி விட்டதால், இனிமேற்கொண்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை என்பதால், விவாகரத்து பரிகாரம் கோரி இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

**3.** இம்மனு அறிவிப்பினை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர், இம்மனுவை நடத்த முன்வராததாலும், கடந்த 18.12.2025ம் தேதியன்று அழைத்தும் ஆஜராகாததாலும், அவருக்கு எதிராக ஒருதலைபட்ச (Ex–parte) உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ சான்றாவணங்களோ முன்வைக்கப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவெனில் :-

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணம் ரத்து செய்யத்தக்கதா? என்பதேயாகும்.

6. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ1ஆகவும், குழந்தையின் பிறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.2 ஆகவும், குழந்தையின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ3ஆகவும், குழந்தையின் பிறப்பிடச் சான்றிதழ் ம.சா.ஆ.4ஆகவும், மனுதாரர் எதிர்மனுதாரர் மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ம.சா.ஆ.5 ஆகவும், ஓமலூர் மகளிர் காவல் நிலையத்தாரால் கொடுக்கப்பட்ட சி.எஸ்.ஆர் ம.சா.ஆ.6ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.7ஆகவும், எதிர்மனுதாரர் இரண்டாவதாக திருமணம் செய்துக்கொண்ட மனைவியுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ.8ஆகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மனுதாரர் தனது மனு சங்கதிகளையே தனது பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு கூறியுள்ளார். மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள மனு சங்கதிகளையும், வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களையும் பரிசீலிக்கையில், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 13.06.2008-ம் தேதி காதல் திருமணம் நடைபெற்றுள்ளது (பத்திரிக்கை அச்சடிக்கப்படவில்லை) என்பது ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. அதாவது, மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படமும், குழந்தை அபிஷேக் பிறப்பு சான்றிதழிலும் தகப்பனார் பெயர் என்ற இடத்தில் எதிர்மனுதாரரின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதும் இதனை உறுதிப்படுத்துகிறது.

**8.** திருமணத்தின் பயனாக கடந்த 21.10.2010ம் தேதியன்று ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் குடும்பம் நடத்த தேவையான அடிப்படை வசதிகளை செய்யாமல், வீட்டை சரிவர பராமரிக்காமல் இருந்து வந்ததாகவும். மேலும், அவர் தன் மனம் போன போக்கில் வாழ்ந்து, மனுதாரரிடம் மரியாதை குறைவாகவும் அநாகரிகமாகவும் கடுஞ்சொற்கள் கூறி மன உளைச்சலை ஏற்படுத்தி வந்ததாகவும், மனுதாரர் குழந்தையின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எதிர்மனுதாரருடன் சுமூகமாக வாழ முயற்சி செய்தும், அது பலனளிக்கவில்லை என்பதாலும், எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று கூறிவிட்டு பிரிந்து போய், அவர் ஜோதி என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டு அவருடன் சேலத்தில் குடும்பம் நடத்தி வருவதாகவும், மனுதாரர் இல்லற வாழ்க்கையை இழந்து மிகுந்த மன உளைச்சலுக்கும் கஷ்டத்திற்கும் ஆளாகி வாழ்ந்து வருவதாகவும், இனியும் சேர்ந்து வாழ வாய்ப்பு இல்லை என்றும், எனவே விவாகரத்து கோரி இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாக மனுதாரர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேற்கண்ட குற்றச்சாட்டுகள் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், அவர் தோன்றா தரப்பினராக (Exparte) அறிவிக்கப்பட்டுள்ளார்.

**9.** மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்திய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் அவர் தரப்பு வழக்கினை நிரூபிக்கும் விதமாக அமைந்துள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் அவைகள் உண்மை அல்ல என நிரூபிக்கும் வகையில் வழக்கை தொடர்ந்து நடத்த முன்வரவில்லை. மாறாக மனுதாரர் தனது வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்திருக்கிறார். எனவே மனுதாரர் கோரியவாறு விவாகரத்து வழங்கி உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கொங்கனாபுரம் கச்சுப்பள்ளி செல்லியம்மன் கோவிலில் 13.06.2008 அன்று இருவரின்

சம்மதத்துடன் இந்து குல வழக்கப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MALATHI Digitally signed by MALATHI Location: subordinate judge, Omalur Date: 2026.03.11 05:10:33 +0530

சார்பு நீதிபதி,
ஓமலூர்.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள்.–**</u>

ம.சா.1 – யாமினி (மனுதாரர்)

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.–**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | – | மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் | அசல் |
| 2. | ம.சா.ஆ.2 | 21.10.2010 | குழந்தையின் பிறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| 3. | ம.சா.ஆ.3 | – | குழந்தையின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 4. | ம.சா.ஆ.4 | – | குழந்தையின் பிறப்பிடச் சான்றிதழ் | சான்றிட்ட நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| 5. | ம.சா.ஆ.5 | – | மனுதாரர் எதிர்மனுதாரர் மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு | கை நகல் |
| 6. | ம.சா.ஆ.6 | – | ஓமலூர் மகளிர் காவல் நிலையத்தாரால் மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட சி.எஸ்.ஆர் | அசல் |
| 7. | ம.சா.ஆ.7 | – | மனுதாரர் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 8. | ம.சா.ஆ.8 | – | எதிர்மனுதாரர் இரண்டாவதாக திருமணம் செய்துக்கொண்ட மனைவியுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் | அசல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** – **இல்லை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** – **இல்லை**

MALATHI Digitally signed by MALATHI Location: subordinate judge, Omalur Date: 2026.03.11 05:10:17 +0530

சார்பு நீதிபதி,
ஓமலூர்.